# முசிறி நகராட்சி

**2022** ஆம் வருடம் **ஜனவரி மாதம் 25.01.2022 செவ்வாய் கிழமை ( தமிழ் பிலவ வருடம் தை மாதம் நாள்.12)** நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை திரு.சி.மனோகரன்,**
**தனி அலுவலர் / ஆணையர்**
**முசிறி நகராட்சி.**

---

**பொருள் எண்: 01**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்து கொள்ளும் அரசு விழா திருச்சிராப்பள்ளி CARE கல்லூரியில் **30.12.2021** அன்று நடைபெற உள்ளதில் இந்நகராட்சி சார்பாக மழைநீர் சேகரிப்பு மாதிரி கட்டமைப்பு தயார் செய்து வைக்கப்பட்டது. இப்பணிக்கு **21.12.2021** தேதி உள்ளூர் மற்றும் வெளியூர் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு விலைப்புள்ளி அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டது. இதில் திவிஷா கன்ஸ்ட்ரக்ஸன் விலைப்புள்ளி ரூ.**49,000/–**, முப்பால் கன்ஸ்ட்ரக்ஸன் விலைப்புள்ளி ரூ.**49,000/–** கே.என் கன்ஸ்ட்ரக்ஸன் ரூ.**50,000/–**ம் விலைப்புள்ளி ஷெட்டியூல் வரப்பெற்றுள்ளது. இதில் திவிஷா கன்ஸ்ட்ரக்ஸன் குறைந்தபட்ச விலைப்புள்ளி அளித்துள்ள ரூ.**49,000/–** அனுமதித்து பணி முடிக்கப்பட்டு செலவினம் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம்–**1920** –ன் பிரிவு **15**ன் கீழ் மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

( ந.க.எண். 695/2021/அ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 02**

முசிறி பேரூராட்சியானது தரம் உயர்வு செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண். 117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள். 07.12.2021ன்படி 07.12.2021 முதல் 2–ம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக உயர்வு பெற்ற நகராட்சியில் வார்டு மறுவரையறை செய்து வரைபடம், எல்லைப் பகுதி மற்றும் இதர விபரம்அடங்கிய கருத்துரு 18.12.2021ம் தேதிக்குள் வார்டு வரைவு மறுவரையறை முன்மொழிவுகள் சமர்ப்பிக்க உறுப்பினர்/செயலர், வார்டு வரையறை ஆணையர் மாநில தேர்தல் சென்னை அவர்களது R.C No.DC/5439/2021 நாள். 17.12.2021ம் தேதிய கடிதத்தில் அறிவுறைகள் வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் பணியாகவும், உடன் இப்பணியை அவசரம் அவசியம் கருதி பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், உள்ளூர்/வெளியூர் License Building Surveyor - களிடம் விலைப்புள்ளிகள் பெற்று , இதில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ வெற்றி குமரன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் துறையூர், என்பவர் ரூ. 1,84,660/– இந்நிறுவனத்தின் உரிமையாளர் திரு. எஸ். லோகநாதன் அவர்கள் பணிமேற்கொள்ளப்பட்டு பணியை முடித்து வழங்கியுள்ளார்கள் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 15ன் கீழ் பணிமேற்கொண்டமைக்கு தொகை ரூ. 1,84,660/–ஐ நகராட்சிக்கு வருவாய் பொதுநிதியிலிருந்து ஸ்ரீ வெற்றி குமரன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் திரு.எஸ். லோகநாதன் துறையூர், அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.154/2021/அ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 03**

திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல் முறைகள் ந.க.எண்.தா5/8563/2021 நாள்.22.01.22ல் நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2021 தொடர்பாக 21.12.21 அன்று திருச்சிராப்பள்ளியில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் மண்டல அளவில் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட்டது. இதில் செலவினம் மேற்கொள்ளப்பட்டதில் முசிறி நகராட்சிக்கு திருச்சிராப்பள்ளி 1. எஸ்.ஆர்.எம். ஹோட்டல் மதிய உணவுக்கு ரூ.34,000/– மற்றும் 2. போட்டோஸ் வீடியோ மற்றும் பேனர்கள் குறித்த விளம்பர பணி செய்தமைக்கு திரு.கோபால் ஒப்பந்ததாரருக்கு ரூ.38,000/– வழங்க செலவினம் பிரித்து நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.. இத்தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

( ந.க.எண்.80/22/அ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 04**

முசிறி நகராட்சியில் வார்டு எண்.8, சர்வே எண்.4/5 (ப), 8/1 நடராஜா நகரில் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துதல் பணிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22–ன் கீழ் கீழ்கண்டுள்ளவாறு பணி தேர்வு செய்யப்பட்டு ரூ.59.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ள விரிவான திட்ட மதிப்பீட்டுக்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பலாம். மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|
| 1 | 08 | முசிறி நகராட்சியில் வார்டு எண்.8 சர்வே எண்.4/5 (ப), 8/1 –ல் நடராஜா நகரில் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துதல் பணி | 59.00 |

(ந.க.எண்: 85/ 2022 /அ1)
அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 05**

இந்நகராட்சிக்கு 2021–22ம் ஆண்டு பொது சுகாதார உபயோகத்திற்கு தேவையான சாமன்கள் கீழ்கண்டவாறு தேவைப்படுகிறது. இந்த பொது சுகாதார சாமன்கள் திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்டிகோ சர்வ் இன்ட் நெம்பர்.13, திருச்சி கொள்முதல் செய்து கௌ்ளவும், இதற்குரிய பில் பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொகையை பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிளீச்சிங் பவுடர் (பொது சுகாதாரம்) | 2500 கிலோ |
| 2 | பிளீச்சிங் பவுடர் (குடிநீர்) | 750 கிலோ |
| 3 | சுண்ணாம்பு நீர் | 2000 கிலோ |
| 4 | லைசால் | 500 லிட்டர் |
| 5 | ஆசிட் | 300 லிட்டர் |

ந.க.எண். 729/2021/அ1

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 06**

இந்நகராட்சிக்கு **2021–22**ம் ஆண்டு தெருவிளக்கு மின்சார சாமான்கள் கீழ்கண்டவாறு தேவைப்படுகிறது. இந்த தெருவிளக்கு சாமான்கள் திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்டிகோ சர்வ் இன்ட் நெம்பர்.13, திருச்சி கொள்முதல் செய்து கொள்ளவும், இதற்குரிய பில் பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொகையை பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **S. No** | **Material** | **Quantity in Nos** |
|---|---|---|
| 1 | 20W LED Tube Light | 400 |
| 2 | 40W Tube Light | 50 |
| 3 | 30W LED Bulb | 50 |
| 4 | 50W LED Bulb | 25 |
| 5 | Tap Roll | 25 |
| 6 | Starter | 500 |
| 7 | Benton Holder | 75 |
| 8 | Aluminum wire | 4 coil |
| 9 | 720 copper wire | 1 coil |
| 10 | 32 Ams Fuse carrier | 20 |

ந.க.எண். 86/22/அ1

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 07**

இந்நகராட்சியில் பொதுநிதி 2021-22 ம் ஆண்டு திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்வதற்கு 21.01.2022 ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார்செய்ததில்

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | முசிறி நகராட்சி வார்டு பகுதியில் ட்ரோன் சர்வே மற்றும் நவீன தொழில் நுட்பத்தை கொண்டு நகரின் அனைத்து விவரங்கள் அடங்கிய சர்வே ரிப்போர்ட் முதல் கட்டமாக தயார் செய்து சமர்ப்பிக்கும் பணி | 9.95 | M/S. SAI SAKTHI GLOBAL INFRA SURVEYS, PALLIKARANAI, CHENNAI | **0.00%** மதிப்பீட்டு விலைவிகிதம் |
| 2 | | | M/S.GEO BASICS SURVEY, NANDHANAM, CHENNAI | **16.67%**மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட அதிகம் |

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/S. SAI SAKTHI GLOBAL INFRA SURVEYS, PALLIKARANAI, CHENNAI – மதிப்பீட்டு விலை விகிதத்தில் வழங்கியுள்ளார் எனவே M/S. SAI SAKTHI GLOBAL INFRA SURVEYS, PALLIKARANAI, CHENNAI ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**( ந.க.எண்.08/2022/அ )**

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்: 08**

மனைப்பிரிவு முசிறி நகராட்சி எல்லைக்குட்பட்ட முசிறி மேற்கு கிராமம் புல எண்.5/2B1B மற்றும் 5/2B2 ல் அமையும் 2.325 ஏக்கர் நிலத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி வேண்டி திரு.P.பாலசுப்ரமணியன் மற்றும் திருமதி Bருக்மணி, எண்.19/4, காவேரி நகர், அந்தரப்பட்டி சாலை, முசிறி அவர்களின் விண்ணப்பம் இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு சமர்ப்பித்து பின்னர் மனைப்பிரிவு வரைபடம் ம.வ.தி.மா எண்.05/22, என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள வரைபடத்தில் கண்டுள்ளவாறு பொது உபயோக இடங்களை மனுதாரர் நகராட்சிக்கு தானமாக வழங்கியுள்ளார். (பத்திர பதிவு எண்.104/22, நாள்.10.01.2022) மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைப்பப்படுகிறது.

(ந.க.எண்.28/2022)

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்

**பொருள் எண்: 09**

முசிறி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வார்டு எண்.2ல் உள்ள குமரன் நகர் பூங்கா மேம்படுத்துதல் பணிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021-22-ன் கீழ் கீழ்கண்டுள்ளவாறு பணி தேர்வு செய்யப்பட்டு ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ள விரிவான திட்ட மதிப்பீட்டுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண். | பணியின் விவரம் | நீளம் (மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 02 | முசிறி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வார்டு எண்.2ல் உள்ள குமரன் நகர் பூங்கா (தெற்கு) சர்வே எண்.66/7எ மேம்படுத்துதல் பணி | 60.00 | 11.00 | 70.00 |

( ந.க.எண்.85/2022/அ )

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்

## பொருள் எண்: 10

முசிறி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள 24 வார்டுகளிலும் இந்நகராட்சி மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், உடைப்புகள், கசிவுகள் ஆகியவைகளை உடனுக்குடன் சரி செய்யும் பணிகளை 2021-22 ஆம் ஆண்டிற்கு பேரூராட்சியாக செயல்பட்ட காலத்தில் ஒப்பந்தகாரர்களாக பதிவு செய்யப்பட்ட நபர்களில் குறைவான விலைப்புள்ளி அளிக்கக்கூடிய ஒப்பந்ததாரர்கள் மூலம் ஜனவரி 2022 முதல் மார்ச் 2022 வரை மேற்கொள்ள உத்தேசமாக ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான பட்டியல் தொகையினை பொதுநிதியில் இருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.,

(ந.க.எண்: 730/ 2021 /அ1)

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்: 11

முசிறி நகராட்சி அலுவலக தொடர்புடைய வழக்குகள், வரி மற்றும் வரியில்லா இனங்கள் தொடர்புடைய வழக்குகள் மற்றும் நகராட்சி நிர்வாகம் தொடர்புடைய வழக்குகளுக்கு அவ்வபோது சென்னை உயர்நீதி மன்றம், சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை நீதிமன்றம் மற்றும் சார்பு நீதிமன்றங்களில் நகராட்சி குறித்த நிலுவை வழக்குகள் குறித்து வக்கீல் மூலம் வாதிடுவதற்கான வக்கீல் கட்டணம் ஜனவரி 2022 முதல் மார்ச் 2022 வரை வழங்குவதற்கு உத்தேசமாக தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் பட்டியல் தொகையினை பொதுநிதியில் இருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.,

(ந.க.எண்: 731 / 2021 /அ1)

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்: 12

முசிறி நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள் (Computers), அச்சுபொறிகள்(Printers) மற்றும் இனையதள வசதிகளில் ஏற்படக்கூடிய பழுதுகளை சரி செய்வதற்கும், பழுதடைந்த கணினி உதிரி பாகங்களை புதிதாக மாற்றி அமைப்பதற்கும், அச்சுபொறிகளில் உள்ள டோனர் மை நிரப்புவதற்கும் மற்றும் அலுவலகம் தொடர்பான சில்லறை செலவினங்கள் ஜனவரி 2022 முதல் மார்ச் 2022 வரை மேற்கொள்ள உத்தேசமாக தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான பட்டியல் தொகையினை பொதுநிதியில் இருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.,

(ந.க.எண்: 732/ 2021 /அ1)

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்: 13

அரசாணை எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.07.12.2021-ன்படி முசிறி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அலுவலகம் மற்றும் முக்கிய இடங்களில் முசிறி பேரூராட்சி என உள்ளதை முசிறி நகராட்சி என பெயர் பலகையினை மாற்றம் செய்யலாம். அதற்காக தகுதி வாய்ந்த விளம்பர பலகை எழுதும் ஓவியர்களிடம் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி வழங்கும் நபர் மூலம் பணி மேற்கொள்ளலாம். அதற்கான செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்: 733/ 2021 /அ1)

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்: 14

அரசாணை எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.07.12.2021-ன்படி முசிறி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் தற்போது, வசூல் செய்யப்படும் வரியினங்கள் அனைத்தும் ஒரே வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் 01.04.2022 முதல் Urban Tree Information (UTS)- ன்படி கணக்கு அமுல்படுத்த உள்ளதால் குடிநீர் வழங்கல் கணக்கு (Water Supply Fund) தனியாக தொடர்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்: 341/ 2022 /அ)

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்: 15**

நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (புதி துறை அரசாணை (நிலை) எண்.71, நாள் .**13.09.2021** நமக்கு நாமே திட்டத்தின் கீழ பணிகள் மேற்கொள்ள அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி முசிறி நகராட்சியில் மேற்காணும் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள **ரூ.20.00** இலட்சம் பொது மக்கள் பங்களிப்புடனும், **ரூ.40.00** இலட்சம் அரசு மான்யமாகவும் மொத்தம் **ரூ. 60.00** இலட்சம் மதிப்பீட்டில் கீழகாணும் பணி திட்டமதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **பணியின் விபரம்** | **மதிப்பீடு தொகை (ரூ.இலட்சம்)** | **தன்னார்வலர் பங்களிப்புதொகை (ரூ.இலட்சம்)** |
|---|---|---|---|
| 1 | முசிறி நகராட்சி பகுதியில் அமையவுள்ள அரசு பொது நூலகத்திற்கு கூடுதல் பணியாக சுற்றுச் சுவர், சிறுவர் பூங்கா, மர இருக்கைகள் மற்றும் தளவாடச் சாமான்கள் அமைத்தல். | **60.00** | **20.00** |

மேற்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பித்திட மனற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்: 199/ 2021 /அ)

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்: 16**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மக்களைத் தேடி மனு நீதி முகாம் திட்டத்தின் கீழ் முசிறி நகராட்சிக்குட்பட்ட அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பள்ளி மைதானத்தில் தமிழக நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் மூலமாக முசிறி மற்றும் அதனை சுற்றியுள்ள ஊர் மக்களிடம் இருந்து நேரிடையாக மனு வாங்கும் நிகழ்ச்சி 22.12.2021 அன்று நடைபெறவுள்ளதாகவும், மேற்படி நிகழ்சி நடைபெறவிருக்கும் இடத்தில் உள்ள புதர்கள், புல் பூண்டுகள் அகற்றி மேடு பள்ளங்களை சமன் செய்து முழுவதும் சுத்தம் செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்களால் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது. பின்னர் 22.12.2021 அன்று நடைபெறவிருந்த நிகழ்ச்சி 23.12.2021 அன்று நடைபெற்றது.

எனவே, மேற்படி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முழுவதும் 17.12.2021 முதல் 22.12.2021 முடிய ஜே.சி.பி இயந்திரம் மூலம் முட்புதர்களை அகற்றி சுத்தம் செய்யும் பணியினை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி என்பவர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது. அதற்கான செலவினம் **ரூ.**1,45,000/- ஐ பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.,

(ந.க.எண்: 681/ 2021 /அ1)

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் எண்: 17

முசிறி நகராட்சியில் பின்வரும் பகுதிகளில் உள்ள மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றம் செய்திட ரூ.117.00 இலட்சத்தில் மேற்கொள்ள மடிதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கான பணியினை மூலதன மானியநிதி திட்டத்தின் கீழ் அரசு முழு மானியத்தில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.,

| வ. எண் | பணியின் பெயர் | நீளம் கி.மீ | தொகை ரூ. லட்சம் |
|---|---|---|---|
| **மண் சாலைகளை பேவர் பிளாக் சாலையாக மாற்றி அமைக்கும் பணி** | | | |
| 1 | வார்டு 02, தில்லை நகர் (டி.வி.ஆர்.தோட்டம்)<br>வார்டு 03 சோழன் நகர் (டி–பெட் ரோடு கிழக்கு)<br>வார்டு 03 சோழன் நகர் 1வது குறுக்குத் தெரு<br>வார்டு 03 அந்தரப்பட்டி மயானம் அப்ரோச் ரோடு<br>வார்டு 03 அந்தரப்பட்டி கொளச்சி முருகன் 1வது தெரு<br>வார்டு 03 அந்தரப்பட்டி கொளச்சி முருகன் 2வது தெரு<br>வார்டு 03 அந்தரப்பட்டி கொளச்சி முருகன் 3வது தெரு<br>வார்டு 08 கலிங்கா நகர் 2வது குறுக்குத் தெரு கிழக்கு மேற்கு வ.08<br>வார்டு 08 கலிங்கா நகர் நடுத்தெரு.<br>வார்டு 09 மேலவடுகப்பட்டி கல்லூரி சாலை 2 தெருக்கள்<br>வார்டு 20 நகர் 1வது தெரு (மாரியாயி நகர்)<br>வார்டு 20 ஊஆ நகர் 2வது தெரு (மாரியாயி நகர்)<br>வார்டு 20 ஊஆ நகர் குறுக்குத் தெரு (மாரியாயி நகர்)<br>மண் சாலைகளை பேவர் பிளாக் சாலையாக மாற்றி அமைக்கும் பணி | 1.974 | 117.00 |
| | **கூடுதல்** | **1.947** | **117.00** |

(ந.க.எண்: 403/ 2022 /அ1)

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 18**

முசிறி நகராட்சி பேரூராட்சியாக செயல்பட்ட போது பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் விநியோகம் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை 2021-2022 ம் ஆண்டு வருட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.சசிக்குமார் என்பவரால் 04/2021 ம் மாதம் முதல் 20.08.2022 ம் மாதம் வரை மேன்மோட்டார் பழுது பார்த்தமைக்கு தொகை வழங்க மன்ற தீர்மானம் எண்.574, நாள்.27.08.2021 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. தற்போது முசிறி பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் முசிறி நகராட்சியில் பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் விநியோகம் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை 2021-2022 ம் ஆண்டு வருட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.சசிக்குமார் என்பவர் மூலம் 31.03.2022 வரை பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம். மார்ச் 2022 ஆம் மாதம் வரை பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் விநியோகம் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு உத்தேசமாக ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் பணி மேற்கொள்ளவும், அதற்கான அவ்வபோது ஏற்படும் செலவினத்தினை பொதுநிதியில் இருந்து வழங்குவதற்கு அனுமதிக்கு.,

(ந.க.எண்:731/ 2021 /அ1)

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.